சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – மாவட்ட ஊரா[illegible]லைவர்களின் பயன்பாட்டிற்கு கழிவு நீக்கம் செய்யப்படும் வாகனத்திற்குப் பதிலாக புதிய 'ஸ்கார்பியோ' வாகனம் வாங்க அனுமதியளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.கி.4) துறை

அரசாணை(நிலை) எண். 40

நாள்: 30.05.2012

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.256, ஊரக வளர்ச்சி (சி1) துறை, நாள் 13.12.1996.
2. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி ஆணையர், சென்னை–15, கடித ந.க. எண்.84748/2010/ஊராட்சி 2–5, நாள் 29.03.2012.

-----

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மாவட்ட அளவில் ஒவ்வொரு மாவட்ட ஊராட்சித் தலைவருக்கும் சிற்றுந்து வாங்கிட அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாவட்ட ஊராட்சித் தலைவர்களின் அலுவலகப் பயன்பாட்டிற்காக அம்பாசிடர் வாகனத்திற்கு பதிலாக ஸ்கார்பியோ வகை வாகனம் வாங்குவதற்கான அவசியம் மற்றும் காரணங்கள் குறித்து கீழ்கண்ட விபரங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்:-

(1) மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சிப் பகுதிகளுக்கும் சென்று பணிகளை பார்வையிடவும் மக்களோடு கலந்துரையாடவும் வேண்டியுள்ளது என்றும், இந்நிலையில் கிராமப்புற சாலைகளில் செல்ல அம்பாசிடர் வாகனம் உகந்ததாக இல்லை என்றும், மாறாக, ஸ்கார்பியோ வகை வாகனம், சற்று உயரமாக இருப்பதால் கிராமப்புறங்களில் உள்ள மண்சாலை, சரளை சாலை மற்றும் மேடு பள்ளங்களில் சிரமம் இன்றி பயணம் மேற்கொள்ள வாய்ப்புள்ளது.

(2) ஸ்கார்பியோ வாகனமானது, அம்பாசிடர் சிற்றுந்துவைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையிலான நபர்கள் செல்ல வாய்ப்புள்ளதாக அமைந்துள்ளது என்றும் இதனால், மாவட்ட ஊராட்சித் தலைவருடன் அந்தந்த பகுதியில் உள்ள மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களும் உடன் செல்லவும், பணிகள் பற்றி விவாதிக்கவும், கூடுதல் விபரங்கள் தரவும் வாய்ப்பேற்படும்.

(3) அம்பாசிடர் வாகன பயணத்தில் ஒரு லிட்டர் எரிபொருளுக்கு சுமார் 10 கி.மீ. தூரம் வரை மட்டுமே செல்ல முடியும் எனவும், ஸ்கார்பியோ வகை வாகனத்தில் சுமார் 12 முதல் 14 கி.மீ. வரை செல்லமுடியும் எனவும், இதனால் எரிபொருள் பயன்பாடு அளவு குறைவதுடன் செலவும் குறைந்திட வாய்ப்புள்ளது.

(4) அம்பாசிடர் வாகனம் – பெட்ரோல் மற்றும் டீசல் மூலம் இயங்கக் கூடியது. ஸ்கார்பியோ வகை வாகனம் டீசலைக் கொண்டே இயங்கக் கூடிய நிலையில் எரிபொருள் செலவு மிகவும் குறைந்திட வாய்ப்புள்ளது.

(5) பெரும்பாலான மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், அம்பாசிடர் வாகனத்தில் அலுவலக பணிகள் தொடர்பாக பயணம் செய்வதில் சிரமமாக இருப்பதாகவும், மாண்புமிகு அமைச்சர்கள் மாவட்ட அளவில் அலுவலக பணிகள் தொடர்பாக கள ஆய்வுகளுக்கு செல்லும்போது அம்பாசிடர் வாகனத்தில் குறித்த நேரத்தில் அமைச்சர்களை பின் தொடர்ந்து செல்ல இயலவில்லையெனவும் தெரிவித்துள்ளதுடன், பயன்பாட்டின் அடிப்படையிலும், வசதியின் அடிப்படையிலும் அம்பாசிடர் வாகனத்திற்குப் பதிலாக ஸ்கார்பியோ வாகனம் சிறந்தது.

3) மேலும், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் அளித்த கோரிக்கையினை ஏற்று கழிவு நீக்கம் செய்யப்பட்ட அம்பாசிடர் வாகனங்களுக்கு பதிலாக 'ஸ்கார்பியோ' வாகனங்கள் வாங்கவும், வாகனம் வாங்குவதற்கான செலவினம், மாவட்ட ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படும் மாநில நிதி ஆணைய மானியத்தில் நிர்வாக செலவிற்காக ஒதுக்கீடு செய்யும் தொகையில் வாங்கிட வழிவகை உள்ளது என்பதால், அரசுக்கு செலவேதும் இல்லை என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

4) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, மாவட்ட ஊராட்சித் தலைவர்களின் பயன்பாட்டிற்கு கழிவு நீக்கம் செய்யப்படும் அம்பாசிடர் வாகனங்களுக்குப் பதிலாக, புதிய 'ஸ்கார்பியோ' வாகனம் வாங்கிக் கொள்ள அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச. பழனியப்பன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, சென்னை–15
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
இயக்குநர், தலநிதிக் கணக்கு, சென்னை–108.
மாநில கணக்காயர்,.சென்னை–18.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–15.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

நகல்
நிதித் (ஊ.வ) துறை, சென்னை-9.
உள் (போக்குவரத்து–4) துறை, சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி)
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பி. ராஜேந்திரன்
பிரிவு அலுவலர்.

20/5/12